தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்தியவானிலைத்துறை
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(17.06.2023 முதல் 21.06.2023)

அறிக்கைஎண் 048/2023 தேதி.16.06.2023

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 13.06.23 முதல் 15.06.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17-22 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (13.05.2023 முதல் 15.06.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 21.06.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | தேதி | நாள்-1 17/06 | நாள்-2 18/06 | நாள்-3 19/06 | நாள்-4 20/06 | நாள்-5 21/06 |
| 8.5 | 1.3 | 3.2 | மழை (மி.மீ) | 2 | 4 | 14 | 22 | 12 |
| 34 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 35 | 35 | 34 |
| 23 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 23 | 23 | 22 |
| 5 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 4 | 8 | 8 | 8 | 8 |
| 70 | 77 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 80 | 90 | 80 |
| 60 | 52 | 57 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 50 | 70 | 60 |
| 20 | 22 | 17 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 8 | 8 | 10 | 10 |
| 200 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 230 | 250 | 230 | 250 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (17.06.2023 முதல் 21.06.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக

பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 17-06-2023 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 18-06-2023 | 10.0 | 4.0 | 5.0 | 5.0 | 3.0 | 3.0 | 8.0 | 8.0 | 3.0 | 5.0 | 3.0 | 4.0 |
| 19-06-2023 | 27.0 | 17.0 | 16.0 | 19.0 | 15.0 | 14.0 | 24.0 | 24.0 | 15.0 | 19.0 | 16.0 | 16.0 |
| 20-06-2023 | 68.0 | 27.0 | 30.0 | 40.0 | 30.0 | 26.0 | 56.0 | 56.0 | 25.0 | 29.0 | 25.0 | 36.0 |
| 21-06-2023 | 64.0 | 18.0 | 22.0 | 33.0 | 22.0 | 18.0 | 51.0 | 51.0 | 16.0 | 21.0 | 16.0 | 28.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான தூறல் மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6 -16 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக திருப்பூர் மாவட்டத்தில் காற்றின் வேகம் அதிகபட்சமாக மணிக்கு 8 -16 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். மேலும் அனைத்து பயிர்களிலும் போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும். அதிகபடியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் வடித்து பின் தேவைப்படும்போது பயன்படுத்தலாம். |
| நெல் | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் போதுமான வடிகால் வசதியுடன் குறுகியகால நெல் இரகங்களை நடவு செய்யவும். மேலும், சாயங்கால வேளைகளில் 2 செமீ அளவிற்கு நீரினைத்தேக்கி பின் காலையில் வடிப்பதனால் வேகமான மழைத்துளிகளினால் நடவு சேய்த நாற்றுகள் புரட்டிபோடுவது தவிர்க்கப்படும். |
| மக்காசோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி ஒரு கிலோ மக்காசோள விதைக்கு 10கிராம் இமிடாகுளோபிரிட் கலந்து விதைக்கலாம். |
| சிறு குறு தானிய பயிர்கள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மேற்கு தொடர்ச்சி மலையோரப்பகுதிகளில் சிறு குறு தானிய பயிர்களை விதைக்கலாம்.<br>மேற்கு தொடர்ச்சி மலையோரப்பகுதிகளில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>பின்பட்டகரும்பு நடவு செய்யும் விவசாயிகள் நடவைதொடரவும். மேலும் ஏற்கனவே நடவுசெய்யப்பட்ட இடங்களில் சீரானபயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். |
| தக்காளி | நடவு பருவம் | தக்காளி நடவு செய்ய இது உகந்த பருவம் ஆதலால் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். |
| பூசணிவகை கொடிப் பயிர்கள் | விதைப்பு | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைக் கொண்டு பாகல் மற்றும் பூசணிவகை கொடிப் பயிர்களுக்கு 1’×1’×1’ குழி எடுத்து ஆற விடவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் மணிக்கு 6 - 16 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | வளர் பருவம் | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் களை எடுக்கவும். |
| திராட்சை | | பருவமழை கால திராட்சையில் காய்ந்த மற்றும் வளர்ச்சியில்லாத கிளைகளை கவாத்து செய்ய இது நல்ல தருணமாகும். |
| தென்னை | | தென்னை மரத்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்ட பாத்தி அமைக்கவும். மேலும் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் கலந்து உரமிடவும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணூட்ட சத்து கலவை 250 கிராம் அளவில் மண்ணின் மேற்பரப்பில் இடவும். |
| கால்நடைகள் | | கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும்.<br>மாலை நேரத்தில் குறைந்த அளவு ஈரப்பதம் நிலவும் என எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு குடிநீரை நான்கு முறை (80-100 லிட்டர்) பிரித்து கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். அதிகபடியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் வடித்து பின் தேவைப்படும்போது பயன்படுத்தலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**